அகில இந்திய வானொலி
திருச்சிராப்பள்ளி

# ஆகாசவாணி செய்திகள்

01.45 pm

**20.04.2025**

## தலைப்பு செய்திகள்

1. 17-வது குடிமைப் பணிகள் தினத்தை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திரமோடி, புதுதில்லியில் குடிமை பணியாளர்களிடையே நாளை உரையாற்றுகிறார்.

2. நாட்டின் அன்னிய பணப்பரிவர்த்தனைகள், பன்முகத் தன்மையுடன் நிலையான வளர்ச்சி கண்டு வருவதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

3. இயேசு பிரான் உயிர்த்தெழுந்த ஈஸ்டர் பண்டிகை கிறிஸ்தவ மக்களால் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

4. தமிழகத்தில் 10 லட்சம் கோடி ரூபாய் புரிந்துணர்வு ஒப்பந்தங்களுடன் வளர்ச்சி திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்படுவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் மும்பையில் இன்றிரவு சென்னை சூப்பர் கிங்ஸ் - மும்பை இண்டியன்ஸை எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

### பிரதமர் – குடிமைப்பணி

பிரதமர் திரு. நரேந்திரமோடி, 17-வது குடிமைப் பணிகள் தினத்தை ஒட்டி புதுதில்லியில் நாளை குடிமை பணியாளர்களிடையே உரையாற்றுகிறார்.

பொது நிர்வாகத்தில் சிறப்பான செயல்பாடு, மாவட்டங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் முன்னோடி மாவட்ட திட்டங்களை செயல்படுத்துவதில் புத்தாக்கம் உள்ளிட்ட 16 பிரிவுகளில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு பிரதமர் விருதுகளை வழங்குகிறார்.

❖❖❖❖❖❖❖❖

### பிரதமர் சவுதி அரேபியா

இதனிடையே 2 நாள் பயணமாக நாளைமறுநாள் பிரதமர் சவுதி அரேபியா செல்கிறார்.

முதலீடு மற்றும் பாதுகாப்பு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது மற்றும் பரஸ்பர சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகள் குறித்து சவுதி அரேபிய மன்னர் முகமது பின் சல்மானுடன் பிரதமர் முக்கிய ஆலோசனை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

**மன் கி பாத்**

**அகில இந்திய** வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 121-வது முறையாக வரும் 27-ம் தேதி காலை 11 மணிக்கு பிரதமர் நாட்டு மக்களிடையே உரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய தங்கள் கருத்துக்களை பொதுமக்கள் நமோ செயலி, mygov இணையதளம் 18 00 11 7800 என்ற தொலைபேசி எண் அல்லது 1922 என்ற எண்ணில் குறுஞ்செய்திகளாகவும் வரும் 25-ம் தேதிவரை தெரிவிக்கலாம்.

❖❖❖❖❖❖❖❖

**ரிசர்வ் வங்கி**

இந்திய நிதி சந்தைகள் பன்முகத் தன்மை, மற்றும் மீட்சியுடன் நிலையான பொருளாதார வளர்ச்சி கண்டு வருவதாக ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

பாலியில் நடைபெறும் 24-வது நிலையான வருவாய் பணச்சந்தை FIMMDA மாநாட்டில் இன்று உரையாற்றியஅவர், கடந்த 4 ஆண்டுகளில் இந்திய அன்னிய செலாவணி சந்தை மதிப்பு 60 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளதாக கூறினார்.

தினசரி பண பரிவர்த்தனைகள் 3 லட்சம் கோடி ரூபாயிலிருந்து, 5 லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் என்ற அளவை எட்டியுள்ளதாக கூறியஅவர், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நிதி நிர்வாக சீர்த்திருத்தங்களால் இது சாத்தியமானதாக தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

**நிர்மலா சீதாராமன்**

**மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன்** அமெரிக்க சான் பிரான்ஸிஸ்கோவில், ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் இன்று உரையாற்றுகிறார்.

முன்னணி நிதி மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகளுடன் இருதரப்பு வர்த்தக பொருளாதார உறவுகளை மேம்படுத்துவது குறித்து ஆலோசனை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

**அஷ்விணி வைஷ்ணவ்**

**இந்தியாவின் படைப்பாற்றல் பொருளாதாரம்** மிகப்பெரிய வளர்ச்சி கண்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மும்பையில் வரும் ஒன்றாம் தேதி தொடங்கும் **வேவ்ஸ்** உலக ஒலி, ஒளி பொழுதுபோக்கு உச்சிமாநாடு தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசியஅவர், உலகளாவிய ஊடக பொழுதுபோக்கு சூழலில், புதிய நடைமுறைகளுக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்றுக் கொள்வதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖

**ஈஸ்டர்**

இயேசு பிரான் உயிர்த்தெழுந்த ஈஸ்டர் உயிர்ப்பு பெருவிழா உலகெங்கும் உள்ள கிறிஸ்தவ மக்களால் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

வேளாங்கண்ணி புனித ஆரோக்கியமாதா பேராலயம், நாகர்கோவில் கோட்டார் புனித சவேரியார் தேவாலயம், பாளையங்கோட்டை தூய சவேரியார் பேராலயம் உள்ளிட்ட அனைத்து தேவாலயங்களிலும் நள்ளிரவு ஈஸ்டர் சிறப்பு திருப்பலிகளும் ஆராதனைகளும் நடைபெற்றன.

வேளாங்கண்ணி பேராலயத்தில் இன்றுகாலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை தமிழ் மலையாளம் கொங்கனி ஆங்கிலம் ஹிந்தி உள்ளிட்ட மொழிகளில் சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

தூத்துக்குடி பனிமயமாதா பேராலயத்தில் நடைபெற்ற சிறப்பு திருப்பலியில் ஏராளமான கிறிஸ்தவர்கள் மெழுகுவர்த்தி ஏந்தியபடி பிரார்த்தனையில் ஈடுபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

**இந்நாளையொட்டி** குடியரசுதலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்ட செய்தியில் உண்மை, நீதி மற்றும் இரக்கத்தின் வழியில் ஏசு கிறிஸ்துவின் வாழ்க்கை மனித குலத்தை ஊக்குவிப்பதாக கூறியுள்ளார்.

**குடியரசு துணைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர்** விடுத்துள்ள செய்தியில் ஏசு கிறிஸ்துவின் போதனைகள் சமூக நல்லிணக்கத்தை எடுத்துரைப்பதாக குறிப்பிட்டுள்ளார்

பிரதமர் திரு.நரேந்திரமோடி வெளியிட்ட செய்தியில் நம்பிக்கை, கருணை அதிகரித்து மகிழ்ச்சி பெருகட்டும் என கூறியுள்ளார்.

வெறுப்பு, வன்முறை நீங்கி நல்லிணக்கம் செழித்து வளர ஏசுபிரானின் போதனைகள் வழிகாட்டட்டும் என தமிழக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வாழ்த்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**தொகுதி மறுசீரமைப்பில் தமிழகத்திற்கான நீதியை** பெற தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்படும் என முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தனியார் நாளிதழுக்கு அவர் அளித்த பேட்டியில் மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பால் தென் மாநிலங்கள் பாதிக்கப்படாது என்பதை நாடாளுமன்றத்தில் பிரதமர் அறிவிக்க வேண்டுமென்றார்.

மும்மொழி கொள்கை, நீட் தேர்வு எதிர்ப்பு உள்ளிட்ட நிலைப்பாட்டில் மாநில அரசு உறுதியுடன் இருப்பதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

10 லட்சம் கோடி ரூபாய் புரிந்துணர்வு ஒப்பந்தங்களுடன் தமிழகத்தில் புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு, பொருளாதார மேம்பாடு உறுதிசெய்யப் படுவதாக கூறிய அவர், மாநிலத்தின் வளர்ச்சிக்கான திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்படுவதாக எடுத்துரைத்தார்.

போதை பெருள் நடமாட்டத்தை தடுக்க கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்த முதலமைச்சர், போதை பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படுதவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

**துரைமுருகன்**

தமிழகத்தின் அனுமதி இல்லாமல் காவிரியின் குறுக்கே மேகதாது அணையை கர்நாடக அரசு கட்டமுடியாது என மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் சேவூரில் ஆறரை கோடி ரூபாய் மதிப்பில் தூர்வாரும் பணிகளை இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், மேகதாது அணை தொடர்பான திட்ட மதிப்பீட்டால் எவ்வித பாதிப்பும் இல்லை என்றார்.

அணை கட்ட மத்திய அரசின் சுற்றுச்சூழல் நீர்வளத்துறை அனுமதி வழங்கவில்லை என்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர் இவ்விஷயத்தில் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொண்டு வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

**சேகர்பாபு**

**மதுரை சித்திரை திருவிழா முன்னேற்பாட்டு** பணிகள் குறித்து மாநில இந்துசமய அறநிலைய துறை அமைச்சர் திரு.சேகர்பாபு இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சங்கீதா தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் மாநில அமைச்சர்கள் திரு.மூர்த்தி, திரு.எ.வ.வேலு, திரு.பழனிவேல் தியாகராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பொதுப்பணி துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு மதுரை, கோரிப்பாளையம், அப்பல்லோ பாலப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக கூறினார்.

சித்திரை திருவிழாவிற்கு வரும் பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும் என கூறிய அவர், அன்னதானம் வழங்குபவர்கள் உணவு பாதுகாப்பு அதிகாரிகளின் அனுமதியை பெற அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

**S.S.சிவசங்கர்**

**அரியலூர் மாவட்ட மைய நூலகத்தில் 19 லட்சம்** ரூபாய் மதிப்பில் புதிதாக கட்டப்பட்ட போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையத்தை மாநில போக்குவரத்து துறை அமைச்சர்

திரு. **S.S.**சிவசங்கர் இன்று திறந்து வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

**நீலகிரி வாய்ஸ்**

**நீலகிரி - கேரளா எல்லையில் நாடுகாணி சோதனை** சாவடியில் புதிதாக ஈ-பாஸ் பதிவு செய்துள்ளவர்களுக்கு ஏற்படும் கால தாமதம் சரிசெய்யப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

**இருவரி**

**புதுக்கோட்டை மாவட்ட அரசு பள்ளிகளில் செயல்படுத்தப்படும்** முதலமைச்சரின் காலை மற்றும் மதிய உணவுத்திட்ட செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. அருணா தலைமையில் இன்று ஆலோசனை நடைபெற்றது.

ஆரோக்கியமான சத்தான காலை உணவுகளை குறிப்பிட்ட நேரத்தில் குழந்தைகளுக்கு வழங்கவேண்டும் என இதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில்** சண்டிகரில் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருவை எதிர்கொள்கிறது.

மும்பையில் இரவு ஏழரை மணிக்கு நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் மும்பை இண்டியன்ஸ் - சென்னை சூப்பர் கிங்ஸுடன் மோதுகிறது.

❖❖❖❖❖❖❖❖

**செஸ்**

**மஹாராஷ்டிரா ஓப்பன் கிராண்ட் மாஸ்டர் செஸ்** சாம்பியன் பட்ட போட்டிகள் புனேயில் நாளை தொடங்குகின்றன.

வரும் 28-ம் தேதிவரை நடைபெறும் இப்போட்டியில் அமெரிக்கா, இந்தோனேஷியா, ஸ்லோவாக்கியா, பெலாரஸ், உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட 13 நாடுகளின் முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖❖